**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. DVC.9/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ஜோதிகா | Prosecution | PW-1 Cross . |
| Father Name | க/பெ.முருகன் | Court | JM, Court, Sirkali. |
| Village | பெருந்தோட்டம் | Taluk | Sirkali. |
| District | மயிலாடுதுறை | Age | 25/2026 |

**Solemnly affirmed by Tmt. R. Geetha Grade -III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 28.01.2026.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவர் என்னிடமிருந்து விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் மீது எந்த தவறும் இல்லை என்பதற்கு சான்றாக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எனக்கு எப்போது எங்கு வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் கடந்த 29.08.2022 அன்று குறுமானகுடியில் உள்ள கோவிலில் வைத்து நடைபெற்றது. எங்கள் திருமணம் காதல் திருமணம் என்றால் இல்லை பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம். என் எனக்கு உறவினர் தான் என்றால் சரிதான். அவர் எனது பெரிய தந்தையின் தங்கை மகன் ஆவார். நான் சொல்லும் பெரியப்பா என் தந்தையோடு உடன் பிறந்தவரா என்றால் இல்லை எனது அம்மாவின் அக்காவை கல்யாணம் செய்தவர்.

நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் என்னுடைய அம்மா வீட்டில் பெருந்தோட்டத்தில் வசித்து வருகிறேன். எனது தந்தை பெயர் என்ன என்றால் அன்பழகன் என்பதாகும். அவர் தற்போது எங்கு இருக்கிறார் என்றால் நான் சிறுவயதாக இருந்த போதே அவர் காலமாகிவிட்டார். என்னோடு உடன்பிறந்தவர்கள் யார் யார் என்றால் எனக்கு இரண்டு அக்கா மற்றும் ஒரு தம்பி உள்ளார்கள். எனது தந்தை இறப்பிற்கு பிறகு எங்கள் குடும்பத்தார்களை யார் கவனித்துக் கொண்டது என்றால் நாங்கள் சிறுவயதிலிருந்தே என்னுடைய பெரியம்மா வீட்டில் தான் வளர்ந்தேன். அந்த பெரியம்மா தான் நான் முன்பு

குறிப்பிட்ட நபர் ஆவார். அவருடைய கணவரின் சகோதரியின் மகன் தான் 1ம் எதிர்மனுதாரர். தற்போது பெருந்தோட்டம் வீட்டில் என்னோடு வேறு யார் குடியிருக்கிறார்கள் என்றால் நானும் என் அம்மாவும் என் தம்பியும் குடி இருக்கிறோம். எனது அக்கா அம்பிகாவும் அவர் கணவரும் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் எங்கள் ஊருக்கு பக்கத்தில் அமைந்துள்ள கிராமமான மணவெளியில் குடியிருக்கிறார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் எனது அக்கா அம்பிகாவும் அவர் கணவரும் எங்களோடு பெருந்தோட்டத்தில் தான் குடியிருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல. திருமணம் ஆன பிறகும் கூட எனது அக்கா அவர் கணவரோடு எங்கள் வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் அவருடைய மாமியார் வீட்டில் தான் குடியிருக்கிறார் அவ்வப்போது இங்கு வந்து செல்வார். 1ம் எதிர்மனுதாரரை எனக்கு திருமணம் செய்து வைக்க பேசியபோது நான் மேற்சொன்ன எனது அக்கா கணவரிடம் எனக்கு 1ம் எதிர் மனுதாரரை பிடிக்காது என்றும் அதனால் திருமணத்தை நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன் என்றால் தவறு. நான் அப்படி எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை.

நான் எத்தனை நாட்கள் என் கணவர் வீட்டில் வசித்ததாக சொல்கிறேன் என்றால் ஏறக்குறைய 1.5 வருடங்கள் வசித்தேன். அந்த காலகட்டத்தில் என் கணவர் என்னை நல்ல முறையில் கவனித்துக் கொண்டாரா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் நான் அவரோடு சேர்ந்து வாழ்ந்த காலகட்டத்தில் எங்களுக்குள் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை என்றாலும் அதனால் தான் நான் அது பற்றி எனது மனுவில் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. அவர் அவர் அந்த காலகட்டத்தில் என்னோடு பிரியமாக நடந்து கொள்ளவில்லை. திருமணம் ஆன உடனே அவர் சென்னைக்கு வேலைக்கு சென்று விட்டார். மேற்படி காலகட்டத்தில் என் கணவர் என்னை சரியாக கவனித்துக் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டு நான் என் மனுவில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் வழக்கறிஞரிடம் சொன்னேன்.

மேகனா என்ற பெண்மணியோடு என் கணவர் கள்ளத்தொடர்பில் இருந்தார் என நான் சொல்லியுள்ள நிலையில் அதற்கு சான்றாக ஏதேனும் ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்க செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கை வலுவடைய செய்வதற்காக நான் அபாண்டமாக 1ம் எதிர்மனுதாரர் மீது அவர் கள்ளத்தொடர்பு வைத்துள்ளதாக பழி சுமத்துகிறேன் என்றால் சரியல்ல. மேகனா என்னும் பெண்ணோடு என் கணவர் WhatsApp ல் பேசியதாகவும் அதை நான்

புகைப்படம் எடுத்து வைத்துள்ளதாகவும் சொல்லும் நிலையில் அத்தகைய ஆவணங்கள் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. விவாகரத்து வழக்கு நடத்தும் எனது வழக்கறிஞரிடம் அந்த ஆவணம் உள்ளது.

என் கணவர் வீடு மாடி வீடு என்றாலும் அதில் மேல் பகுதியில் நாங்கள் குடியிருந்தோம் என்றாலும் அந்த வீட்டின் கீழ் பகுதியில் தான் இவ்வழக்கின் மற்ற எதிர்மனுதாரர்கள் குடியிருந்தார்கள் என்றாலும் சரியல்ல. மாடியில் எங்களோடு எனது மாமியாரும் வசித்தார். எனது மாமனார் மற்றும் கொழுந்தனார்தான் கீழ்ப்பகுதியில் வசித்தார்கள். 4ம் எதிர் மனுதாரரின் மனைவி நிறைய சீர் கொண்டு வந்ததாகவும் அதற்காக எதிர்மனுதாரர்கள் என்னை மட்டம் தட்டியதாகவும் நான் எனது மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதி முழுக்க முழுக்க பொய் என்றால் சரியல்ல. நான் என் கணவரோடு ஒன்றாக வசித்தபோது செல்போன் பயன்படுத்தினேனா என்றால் பயன்படுத்தினேன். அந்தப் போனை என் கணவர் தான் வாங்கி கொடுத்தார். நான் எப்போதும் அந்த தொலைபேசியில் யாருடனாவது பேசிக்கொண்டே இருப்பேன் என்றாள் சரியல்ல. நான் அவ்வாறு போன் பேசிக்கொண்டு வீட்டு வேலைகள் எதையும் செய்யாமல் காலம் கழித்து வந்தேன் என்றால் சரியல்ல.

நான் எவ்வளவு படித்துள்ளேன் என்றால் 12வது வரை படித்துள்ளேன். நான் தற்போது ஒரு கடையில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் தவறு. வீட்டில் தான் உள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் நான் தற்போது ஒரு கடையில் மாதம் ரூ.10,000/- சம்பளத்திற்கு வேலை பார்த்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் தற்போது வசிக்கும் பெருந்தோட்டம் வீடு எங்கள் சொந்த வீடா என்றால் ஆமாம். அந்த வீட்டின் மதிப்பு ரூ.50,00,000/- இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தையல் வேலை தெரியும் என்றால் தவறு. கொக்கி தைக்க மட்டும் தெரியும். நான் திருமணத்திற்கு முன்பே தையல் வேலை செய்து நிறைய காசு பணம் சம்பாதித்து வந்தேன் என்றால் தவறு. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் மாயவரம் மகளிர் போலீசில் புகார் கொடுத்துள்ளேன். அதற்கு சான்றாக ஏதேனும் ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆகவே நான் என் மனுவில் சொன்னது போல் எனக்கும் என் கணவருக்கும் பிரச்சனை எதுவும் ஏற்படவில்லை என்றாலும் அதனால் தான் நான் எந்த ஆவணங்களும் தாக்கல்

செய்யவில்லை என்றாலும் போலீசில் புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. நான் என் கணவரை விட்டு என்ன காரணத்திற்காக பிரிந்து சென்றேன் என்பது குறித்து இந்த மனுவில் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் வேறு ஒரு பெண்ணோடு தொடர்பில் உள்ளதாலும் திருமணம் ஆனதிலிருந்து என்னை பிரியமாக கவனித்துக் கொள்ளாததாலும் எப்போதும் வேலைக்காக வெளியூர் சென்று விடுவதாலும் நாங்கள் பிரிந்து விட்டோம். என் கணவர் என் மீது பிரியமாக இல்லை என நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு பிரியமாக இல்லாத அவரது வீட்டில் 1.5 வருடங்கள் நான் தங்கி இருந்திருக்க சாத்தியமில்லை என்றாலும் சரியல்ல . அந்த காலகட்டத்தில் என் கணவர் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை தான் வீட்டிற்க்கே வருவார். என் கணவர் சம்பாதித்து கொடுக்கும் பணத்தை நான் எனது பெற்றோர் வீட்டு தேவைகளுக்காக செலவு செய்தேன் என்றால் சரியல்ல. அவர் இதுவரை என்னிடம் பணம் எதுவும் சம்பாதித்து கொடுத்தது கிடையாது. எனது மனுவில் எதிர்மனுதாரர்கள் என்னை வாழாவெட்டியாக ஆக்கி விடுவேன் என கூறியதாக சொல்லி உள்ளது தவறு என்றாலும் அவர்கள் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

1ம் எதிர் மனுதாரர் மாதம் ரூ.12,000/- எனக்கு ஜீவனாம்சமாக தர வேண்டும் என நான் கூறியுள்ளது சாத்தியப்படாதது என்றாலும் அந்த அளவிற்கு அவருக்கு வசதி வாய்ப்பு கிடையாது என்றாலும் சரியில்ல. நான் ஒரு தனியார் கடையில் வேலை பார்த்து மாதம் ரூ.10,000/- சம்பாதித்து வசதி வாய்ப்பாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எங்கும் வேலைக்கு செல்லவில்லை வீட்டில் தான் இருக்கிறேன். நான் தான் வேண்டுமென்றே என் கணவரை பிரிந்து வசித்து வருகிறேன் என்றாலும் ஆகவே அவரிடம் இருந்து ஜீவனாம்சம் கோர எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. என் கணவர் தான் வேண்டும் என்று என்னிடம் வம்பு வளர்த்து என்னை இரவில் வீட்டை விட்டு விரட்டினார். அவ்வாறு விரட்டப்பட்டது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் உடனே கொடுக்கவில்லை. ஏனெனில் அதற்கு மறுநாள் தீபாவளி. பின்னர் நாங்கள் ஊர் பெரியவர்களிடம் பஞ்சாயத்து பேசி அங்கு முடிவு ஏற்படவில்லை என்ற பிறகுதான் காவல் நிலையம் சென்றேன். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறு நான் புகார் செய்ததற்கு சான்றாவனம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

ஊரில் பஞ்சாயத்து பேசியதாக சொல்லும் நிலையில் யார் யார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் ரவி என்பவர் மூலமாக பேசப்பட்டது. நான் சொல்வது பொய் என்றாலும் அவ்வாறு பஞ்சாயத்து எதுவும் பேசப்படவில்லை என்றாலும் சரி அல்ல. அதேபோல என் கணவரின் பெற்றோர்கள் சகோதரர் ஆகியோர் தனியாக தான் குடியிருந்தார்கள் என்றாலும் என்னோடு ஒன்றாக அவர்கள் வசித்ததில்லை என்றாலும் சரியல்ல. கொழுந்தனார் மட்டும் தான் தனியாக கீழ் வீட்டில் குடி இருந்தார். 2,3,4 எதிர் மனுதாரர்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் அவர்களை சிக்க வைக்க வேண்டும் என்கிற ஒரே நோக்கோடு நான் அவர்களையும் இதில் சேர்த்துள்ளேன் என்றாலும் சரியில்ல. என்னுடைய மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**